[பேரவைத் தலைவர்] [2015 செப்டம்பர் 21

(குறுக்கீடுகள்) அதற்கெல்லாம் உரிய பதிலை நான் சொல்லிவிட்டேன்; உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அதெற்கெல்லாம் பதில் சொல்லிவிட்டேன்; உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

5. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி

(ஈ) அவை உரிமைக் குழு உறுப்பினர்கள் தேர்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவை உரிமைக் குழு. அவை உரிமைக் குழுவிற்கு 14 உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடுகள்) அதற்கெல்லாம் நான் உரிய பதிலைச் சொல்லிவிட்டேன். (குறுக்கீடுகள்) உரிய பதிலைச் சொல்லிவிட்டேன். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 227–ன்கீழ். . . (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. க. பாலகிருஷ்ணன், முதலில் உங்கள் இடத்திற்குப் போய் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 227–ன்கீழ், 2015–2016 ஆம் நிதியாண்டிற்குரிய அவை உரிமைக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி, பதினான்கு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப்பேரவை தேர்ந்தெடுக்கும்"

என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களுடைய தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

2015 செப்டம்பர் 21] [பேரவைத் தலைவர்]

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

6. அறிவிப்பு

பேரவைக் குழுக்களுக்கு உறுப்பினர்கள் தேர்தல்-கால அட்டவணை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. பேரவைக் குழுக்களுக்கான தேர்தல். (குறுக்கீடுகள்) ஒற்றை மாற்று முறைப்படி தேர்தல் நடத்துவதற்கு பேரவை வகுத்துள்ள விதிமுறைகளின்படி, மதிப்பீட்டுக் குழு (Committee on Estimates), பொதுக் கணக்குக் குழு (Committee on Public Accounts), பொது நிறுவனங்கள் குழு (Committee on Public Undertakings), அவை உரிமைக் குழு (Committee on Privileges) ஆகியவற்றுக்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வேட்பாளர்கள், வேட்புத் தாள்களை 2015 ஆம் ஆண்டு, செப்டம்பர் திங்கள் 23 ஆம் நாள், புதன்கிழமை பிற்பகல் 1-00 மணிக்குள் சட்டமன்றப் பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும்.

(இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) உறுப்பினர்கள் எழுந்து நின்று அவையில் பேசிக்கொண்டிருந்தனர்.)

வேட்புத் தாள்களைச் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். (குறுக்கீடுகள்)

வேட்புத் தாள்கள், 2015 ஆம் ஆண்டு, செப்டம்பர் திங்கள் 23 ஆம் நாள், புதன்கிழமை மாலை 3-00 மணிக்கு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும். விலகிக்கொள்ள விரும்பும் வேட்பாளர்கள், 2015 ஆம் ஆண்டு, செப்டம்பர் திங்கள் 25 ஆம் நாள், வெள்ளிக்கிழமை காலை 10-00 மணிக்குள் விலகிக்கொள்ளலாம். (குறுக்கீடுகள்)

வேட்பாளர்களின் எண்ணிக்கை, நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு மேற்படுமாயின், குழுக்களுக்கான உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க தேர்தல் நடைபெறும் நாள் பின்னர் அறிவிக்கப்படும். (குறுக்கீடுகள்)